LIBRARY
9 - APR 1962
STATE LEGISLATURE, MADRAS

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

*Thursday, 31st August* 1961.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, the Deputy Speaker (SRI B. BHAKTAVATSALU NAIDU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

DEPUTY SPEAKER: Question Nos. 1535, 1542 and 1570 have been postponed as the Hon. Minister concerned, is not here.

Short Notice Question No. 17 and Question Nos. 1571 and 1572 may be answered together.

*Conference of Chief Ministers* (1961)

* 17 *S.N.Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Chief Minister be pleased to place on the table of the House a statement containing the conclusions of the Chief Ministers' Conference held in New Delhi recently on the subject of National Integration and Official Language?

THE HON. SRI C. SUBRAMANIAM: A copy[a] of a statement issued by the meeting of Chief Ministers and Central Ministers held in New Delhi on 10, 11 and 12th August 1961 is placed on the table of the House. The statement embodies the policy decisions arrived at in the meeting.

* 1571 *Q.*—SRI T. S. RAMASWAMI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether a decision has been taken at the recent Chief Ministers' Conference held at Delhi to take effective steps on parties or organizations whose aims are secession from the Indian Union; and

(*b*) if so, the details of the decision?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) & (*b*) The attention of the hon. Member is invited to the statement already placed on the table of the House, embodying the policy decisions arrived at the Chief Ministers' Conference.

* 1572 *Q.*—SRI T. S. RAMASWAMI: Will the Hon. the Chief Minister be pleased to state the various decisions taken at the Chief Ministers' Conference held at Delhi, during the second week of August 1961.

THE HON. SRI C. SUBRAMANIAM: The attention of the hon. Member is drawn to the statement already placed on the table of the House, embodying the policy decisions taken at the recent Chief Ministers' Conference in New Delhi.

---

[a] Printed as Append : on pages 525–531 infra.

[31st August 1961

SRI M. KALYANASUNDARAM : முதல் அமைச்சர்கள் மகாநாட்டின் முடிவுகளை நமது அரசாங்கம் சரியாகப் பரிசீலித்ததா? பிரதேச மொழிக்குக் கொடுக்கவேண்டிய முக்கியத்துவத்தைப்பற்றி நம்முடைய ராஜ்யத்தின் சார்பில் சர்வகட்சி கூட்டத்தின் முடிவுகளுக்கும் இதற்கும் முரண்பாடு இருக்கிறதா? முரண்பாடு இருக்கிறதென்றால் என்ன என்ன என்று சொல்வார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போதுதான் அந்த அறிக்கையின் நகல் கிடைத்திருக்கிறது. அது பரிசீலனையில் இருககிறது. பரிசீலனை முடிந்தபிறகுதான் முரண்பாடு இருக்கிறதா, இருந்தால் என்ன என்ன என்று நிச்சயமாகச் சொல்லமுடியும்.

SRI M. KALYANASUNDARAM : நமது ராஜ்யத்தில் நாம் செய்த முடிவு இங்குள்ள கல்லூரிகள் எல்லாவற்றிலும் பிரதேசமொழி போதனா மொழியாக மாறவேண்டும், அதற்குரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பது. ஆனால் இந்தச் சிபார்சுகளில் அதற்கு மாறாக ஆங்கிலத்தை நீடிக்கவேண்டுமென்று மறைமுகமாகச் சொல்லப்படுகிறது. அந்த மகாநாட்டில் நமது முதல் அமைச்சர் அவர்கள் கலந்துகொண்டார்களா? அப்படியானால் இவர்கள் சொன்ன யோசனை என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப்பற்றி தனியாக ஒரு நாள் விவாதிக்கப் போகிறோம். அப்போது இந்த விவரம் எல்லாம் முழுவதும் பரிசீலிக்கப்படும். இரண்டாவது பகுதியைப் பார்த்தால் ஏறக்குறைய நாம் செய்த முடிவுக்கே அது ஒத்துவரக்கூடியதாக இருக்கிறது. நான் இன்னும் அதைப் பூராவும் பரிசீலித்துப் பார்க்கவில்லை. அதற்காக தனியாக ஒதுக்கியிருக்கும் நாளில் அதைப்பற்றி விவாதிக்கலாம்.

SRI K. ANBAZHAGAN : ராஜ்ய முதல் அமைச்சர்கள் மகாநாட்டிலே நாட்டின் ஒற்றுமையைக் காப்பாற்றவும், அதற்கு விரோதமாக உரிமை கேட்கிறவர்களை அடக்குவதற்காக தண்டனை அளிக்க சட்டம் இயற்றவேண்டுமென்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டதா?

THE HON. SRI C. SUBRAMANIAM : அங்கே என்ன நடந்தது என்பது இந்த அறிக்கையில் வைக்கப்பட்டிருக்கிறது. அதைப் படித்துத் தெரிந்துகொள்ளலாம். நான் இன்னும் படிக்காததனால் அதைப்பற்றி விவாதிக்க குறிக்கப்பட்டுள்ள நாளில் விவரமாகத் தெரிவிக்கிறேன்.

SRI A. A. RASHEED : May I know whether the decisions taken there are obligatory or they are only advisory in nature?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I have already stated that I have not examined the full scope of the decisions arrived at and the opinions expressed there. Therefore, I am not in a position to express any views on this matter now.

DEPUTY SPEAKER : We shall pass on to the next question.

Sri K. Vinayakam and Sri N. K. Palanisami rose.

SRI K. VINAYAKAM : When a paper is placed on the table of the House, it is presumed that the Minister concerned with the Question will be seized of the matter. That being the case, we may be allowed to put some supplementaries instead of taking up the next question now.

DEPUTY SPEAKER : The hon. Members are aware that the Business Advisory Committee has agreed to the allotment of a day, viz., 25th September, for the discussion of this matter. So, all

31st August 1961]

the view-points may be put forward on that day, and there is no need to put any further supplementaries now, especially when the Hon. Minister wants time to study the various aspects. That was why I said that we could pass on to the next question.

**Sri M. KALYANASUNDARAM:** அடுத்த விவாதத்திற்குள்ளாகவாவது சர்க்கார் இந்த அறிக்கையைப் பரிசீலனை செய்து, இதில் நமது கருத்துக்களையொட்டியவை எவை; முரண்பாடாக இருக்கக்கூடியவை எவை என்பதை தயாரித்து, சர்க்காருடைய கருத்து என்ன என்பதற்கு ஒரு அறிக்கை சமர்ப்பிப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM:** அறிக்கைக்கு மேலே அறிக்கை வேண்டுமா என்பது யோசிக்கவேண்டிய விஷயம்.

### *Central Taxes (State's share)*

*1531 *Q.*—**Sri S. M. ANNAMALAI:** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மத்திய சர்க்கார் விதிக்கும் வரிகளில் மாநில சர்க்காருக்குத் தரவேண்டிய பங்கு கிடைக்கவில்லை என்பது உண்மையா?

(இ) அப்படியானால், எந்தெந்த இனங்களில் எவ்வளவு பணம் குறைவு?

**The Hon. Sri C. SUBRAMANIAM:** (அ) No.

(இ) Does not arise.

**Sri S. M. ANNAMALAI:** நமது நிதி அமைச்சர் அவர்கள் மேல் சபையில் பேசுகின்றபோது சொல்லியிருக்கிறார்கள். மத்திய சர்க்காரிடம் இருந்து நமக்கு வந்துசேரவேண்டிய பணம் சில ஐட்டங்களில் வந்துசேரவில்லை யென்று சொல்லியிருக்கிறார்களே, அதைக் குறித்து கனம் அமைச்சர் அவர்கள் விளக்கம் தரவேண்டும்.

**The Hon. Sri C. SUBRAMANIAM:** இதிலே கேட்கப்பட்டிருப்பது—"whether it is a fact that the share of the Central taxes due to this State has not been received" என்பதுதான். வரவேண்டிய பங்கை அதிகரிக்கவேண்டும் என்றுதான் பைனான்ஸ் கமிஷனிடம் வற்புறுத்தியிருக்கிறோம். நான் கொடுத்திருப்பதைப் படித்துவிட்டு கேள்வி கேட்டால் சௌகர்யமாக இருக்கும்.

**Sri M. KALYANASUNDARAM:** நிதிக் கமிஷன் முன்பு நமது சர்க்கார் ஏதாவது சிபார்சுகளைக் குறித்து சமர்ப்பித்திருக்கிறார்களா? அப்படியானால் அங்கே கொடுக்கப்பட்டிருப்பதன் நகலை இந்தச் சபை முன்பு வைத்து விவாதிப்பதற்குச் சந்தர்ப்பம் தரப்படுமா?

**The Hon. Sri C. SUBRAMANIAM:** இந்தச் சர்க்கார் தன் கருத்துக்களை பைனான்ஸ் கமிஷன் முன் வைத்திருக்கிறது. இந்தச் சபை முன்பு வைக்கலாம் என்று யோசித்ததற்கு அது கான்பிடென்சியல் ஆனதினால் அதை வைப்பது உசிதம் இல்லையென்றும் முடிவு செய்யப்பட்டது. ஆனால் அதையொட்டி கனம் அங்கத்தினர்கள் ஏதாவது நல்ல கருத்துக்களைக் கொடுத்து உதவினார்களென்றால் நான் நன்றி செலுத்துவேன்.

**Sri M. KALYANASUNDARAM:** அப்படியானால் சர்வ கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தையாவது கூட்டி முடிவு செய்வார்களா?

**The Hon. Sri C. SUBRAMANIAM:** இதைப்பற்றி ஆலோசித்து முடிவு செய்யப்படும்.